**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 440/2024**

திரு.பிரகாஷ் (P.W. –3) **08.04.2026**

**<u>நீதிமன்றத்தில் சாட்சி சம்மன் வந்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன்</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா வாதி, பிரதிவாதிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி எங்கு வசிக்கிறார் என்றால் ஆனந்தராஜ் நான் வசிக்கும் வீட்டிற்கு அடுத்த தெருவில் வசிக்கிறார். சண்முகமும் பிரியங்காவும் எங்கு வசிக்கிறார்கள் என்றால் நான் வசிக்கும் வீட்டிற்கு அடுத்த வீதியில் வசிக்கிறார்கள். சண்முகம் ஆரோக்கிய அமிர்தராஜிடம் பணம் வாங்கினார் கடனாக பெற்றிருந்தார். பணம் வாங்கிய அன்று எதுவும் நடக்கவில்லை. நான்கு லட்சம் சண்முகமும், பிரியங்காவும் ஆரோக்கிய ராஜிடம் வாங்கினார்கள். அதன் பிறகு எதுவும் நடக்கவில்லை. 10.8.2023 பணம் கொடுத்தார்கள்.

2. ஆனந்தராஜ் அன்றைய தேதியில் என்னை அழைத்திருந்தார். காலையில் அழைத்தார்கள் பணம் கொடுத்தார்கள். கையெழுத்து போடும்படி சொன்னார்கள் கையெழுத்து போட்டேன். வா.சா.ஆ–1 ஆவணத்தில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது. பணம் கொடுத்ததற்காக கையொப்பம் செய்யச் சொன்னார்கள் ஜாமினுக்காக கையொப்பம் செய்தேன். ஆனந்தராஜ் எழுதினார் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. ஆனந்தராஜ், ஆரோக்கிய அமிர்தராஜ் ஆகியோரை எனக்கு எப்போதிலிருந்து தெரியும் என்றால் சிறு வயதில் இருந்து தெரியும். மாரியம்மன் கோவில் வீதியில் எவ்வளவு நாட்களாக வசித்து வருகிறேன் என்றால் பிறந்ததிலிருந்து சொந்த வீட்டில் உள்ளேன். கையொப்பம் ஆனந்த்ராஜ் வீட்டில் வாங்கினார்களா?

ஆரோக்கிய அமிர்தராஜ் வீட்டில் வாங்கினார்களா என்றால் ஆனந்தராஜ் வீட்டில் வாங்கினார்கள். நான் ஆனந்தராஜ் வீட்டிற்கு செல்வதற்கு முன்பு ஆவணம் நிரப்பப்பட்டு ஆனந்தராஜ் தயார் செய்து கையொப்பம் செய்து வைத்திருந்தார் அதன் பிறகு நான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். இந்த சங்கதிகள் அன்றைய தேதியில் எத்தனை மணிக்கு நடந்தது என்பதெல்லாம் ஞாபகம் இல்லை மறந்து விட்டது என்றால் சரி. சாட்சி தற்போது காலையில் என்று மாற்றி கூறுகிறார். கடன் தொகையை நான் எண்ணிப் பார்க்கவில்லை என்றால் சரி. ஆனால் கடன் தொகையை கொடுத்தார். கையொப்பம் செய்யச் சொன்னார்கள் செய்தேன். நான் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை. ஆனந்தராஜ், ஆரோக்கிய அமிர்தராஜ் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. நான் சொன்னது போல் ரூபாய் 4 லட்சம் கொடுக்கப்படவில்லை பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு கொடுத்தார்.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.04.08 18:20:27 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.